**பதுளை மாவட்டத்திலுள்ள 31 கமநல சேவை குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 பதுளை மாவட்டத்திலுள்ள 31 கமநநல சேவை குழுக்களின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 58(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

1.2 பதுளை மாவட்டத்திலுள்ள 31 கமநல சேவை குழுக்களின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான தவறுகள் கீழே தரப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) விசாய வங்கிகளானது கமநல சேவைக் குழுக்களின் ஒரு அலகாக உள்ள போதிலும் பதுளை மாவட்டத்திலுள்ள 31 கமநல சேவைக் குழுக்களின் திரண்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்திடமிருந்து ஆலோசனையைப் பெற்று எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | திரண்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் அதன் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யும்போது கிரய மாதிரி அல்லது மீள்மதிப்பீட்டு மாதிரி தேர்நதெடுக்கப்பட வேண்டியதுடன் அக்கொள்கையானது ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பிரிவிற்கு பயன்படுத்தப்பட வேண்டியதுடன் 31 கமநல சேவை நிலையங்களின் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்வது தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவலில்லை. | தலைமை அலுவலகத்திடமிருந்து ஆலோசனையைப் பெற்று எதிர்வரும் காலங்களில் மீள்மதிப்புச் செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 11 குழுக்களின் 18 கட்டிடங்கள் 07 காணிகள் மற்றும் 04 ஏனைய சொத்துக்களின் பெறுமதி அடையாளங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதியை அடையாளம் கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 24 குழுக்களின் 04 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக அறவிட வேண்டிய மீதிகளாக முன் கொண்டு வரப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 16,989,337 ஆன 362 கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக கடன்பட்டோர்களாகக் காட்டப்பட்டிருந்தது. | தகவல்களைப் பரீட்சித்துப் பார்த்து உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது அவ்வாறு இல்லையாயின் அங்கீகாரத்தினைப் பெற்று பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பரீட்சிப்பினை மேற்கொண்டு உரிய காலத்தில் கடன் மீதியை அறவீடு செய்யாத உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதுவும் அறவீடு செய்ய முடியாது என உறுதிப்படுத்தக்கூடிய மீதிகளை முறையான அங்கீகாரத்தின் கீழ் பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுப்பதுவும் அறவிடக்கூடிய மீதிகளை அடையாளங்கண்டு அறவீடு செய்தலும் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 25 குழுக்களின் 04 ஆண்டுகளிலிருந்து 38 ஆண்டுகள் வரையான கால வீச்சில் செலுத்த வேண்டிய மீதிகளாக முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட மொத்தமாக ரூபா 24,048,714 ஆன 272 கணக்கு மீதிகள் சம்பந்தமாக முறையான அங்கீகாரத்தினைப் பெற்று பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக கடன்கொடுத்தோராகக் காட்டப்பட்டிருந்தது. | தகவல்களை பரீட்சித:துப் பார்த்து உரிய தரப்பினர்களை அடையாளங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு அல்லது அவ்வாறு செய்ய முடியவில்லையாயின் அங்கீகாரத்தினைப் பெற்று மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முறையான பரீட்சிப்பினை மேற்கொண்டு செலுத்த வேண்டியவை என உறுதிப்படுத்த முடியாத மீதிகளை முறைப்படியான அங்கீகாரத்தின் கீழ் பொருத்ததமான வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செலுத்த வேண்டிய மீதிகளை அடையாளம் கண்டு துரிதமாக செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 03 குழுக்கள் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்திருந்த மொத்தமாக ரூபா 560,903 ஆன நிலையான சொத்துக்கள் மூலதனச் செலவுகளாக கணக்கீடு செய்யப்படாது மீண்டுவரும் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்துவரும் நிதிக்கூற்று க்களில் சரியாக கணக்கீடு செய்யப்படும். | சரியான வகைப்படுத்தலுடன் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டியதுடன் உரிய செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 03 குழுக்கள் செலவுகளின் மீளளிப்புக்களான ரூபா 1,194,487 தொகையினை மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்திருந்தது. | அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் சரியாக தயாரிக்கப்படும். | வருமானங்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன் உரிய செம்மையாக்கல்களும் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | ரிதிபான கமநல சேவை குழுவின் வணிக பசளை வியாபாரக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 185,000 அதிகரித்து காட்டடிருந்தது. | வணிக பசளைகளின் சந்தை விலை அதிகரித்தமையின் காரணமாக விலைகள் திருத்தம் செய்யப்பட்டன. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் பிரகாரம் இருப்புக்கள் பெறுமதியிடப்படுதல் வேண்டும். |
| (எ) | நாகதீப கமநல சேவை குழுவின் 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 101,1000 கிரயமான காலாவதியான விதை நெல் இருப்பு ரூபா 57,500 தொகைக்கு கைதவிர்ப்புச் செய்து கைதவிர்ப்புச் செய்த இருப்பின் கிரயம் ரூபா 101,000 தொகையானது திருப்பி அனுப்புதல்களாகவும் காலாவதியான இருப்புக்களின் விற்பனை வருமானம் ரூபா 57,500 தொகையானது ஏனைய வருமானமாகவும் நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் கைதவிர்ப்பு இலாபமான ரூபா 43,600 தொகை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக குழுவின் மிகை ரூபா 202,200 ஆல் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உரிய செம்மையாக்கல் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | கும்பல்வெல கமநல சேவை குழுவின் நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 80,000 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஐ) | பரம்பரபான விவசாய வங்கியின் பொதுப் பேரேட்டில் திரண்ட நிதியக் கணக்கு வங்கி வருமானக் கணக்கு மற்றும் வங்கி செலவுக் கணக்கு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் கணக்குகள் தயாரிக்கப்படும். | பொதுப் பேரேட்டில் அனைத்து கணக்குகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஒ) | பல்லகெடுவ கமநல சேவை குழுவின் நிதி நிலைமை கூற்றில் | எதிர்வரும் காலங்களில் நாட்குறிப்பின் மூலம் | சரியாக கணக்கீடு செய்து |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான தேறிய பெறுமதியை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது ஆரம்ப கிரயத்தினை பதிவு செய்ததன் மூலம் நடைமுறையற்ற சொத்துக்களின் மீதி ரூபா 103,614 ஆல் அதிகரிததுக் காட்டப்பட்டிருந்தது. : | சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்படுதல் வேண்டும். |
| (ஓ) | மஹியங்கன கமநல சேவை குழுவின் 2024 ஆம் ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,820,494 ஆக இருந்த போதிலும் அது ரூபா 1,217,223 ஆக ரூபா 603,271 குறைத்து நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 129,042 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சரியாக கணக்கீடு செய்யப்படும். | அட்டுறு அடிப்படையில் வருமானங்களை அடையாளம் கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 06 கமநல சேவை குழுக்களின் 18 கணக்கு விடயங்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 172,162 ஆனது தொடர்புடைய அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகளை விட அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பீடு செய்து சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 13 கமநல சேவை குழுக்களின் 57 கணக்கு விடயங்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 11,204,669 ஆனது தொடர்புடைய அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த மீதியைவிட குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பீடு செய்து சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 07 கமநல வங்கி முன்னோடி செயற்திட்டங்களின் 20 கணக்கு விடயங்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 1,767,976 ஆனது தொடர்புடைய அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த மீதியினை விட | எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பீடு செய்து சரிசெய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 05 கமநல வங்கி முன்னோடி செயற்திட்டங்களின் 16 கணக்கு விடயங்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 1,126,915 ஆனது தொடர்புடைய அறிக்கைகளில் காட்டப்பட்ட மீதிகளைவிட குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பீடு செய்து சரிசெய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | எடம்பிடிய கமநல சேவை குழுவின் நிதி நிலைமை கூற்றில் முழு சொத்துக்களுக்கும் பொறுப்புக்குமிடையே ரூபா 138,000 வித்தியாசம் காணப்பட்டது. | பீழைகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் சரிசெய்யப்படும். | உரிய ஒப்பீடுகளை மேற்கொண்டு நிதி நிலைமை கூற்றிலுள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | ரம்புக்பொத கமநல சேவை குழுவின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட கமநல வங்கி (முன்னோடி) செயற்திட்டத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 45,165 மீதி கமநல வங்கியின் (முன்னோடி செயற்திட்டத்தின்) நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பீடு செய்து சரிசெய்யப்படுதல் வேண்டும். |

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 06 கமநல சேவை குழுக்களின் 27 ஆண்டுகளுக்கும் 35 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் தொங்கல் கணக்கின் வரவு பெறுமதி ரூபா 544,542 மற்றும் 06 குழுக்களின் 08 ஆண்டுகளுக்கும் 09 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட முன்கொண்டு வரப்பட்டடிருந்த தொங்கல் கணக்கு செலவு மீதிப் பெறுமதி ரூபா 1,323,134 தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் அந்த மீதிகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து சரிசெய்யப்படும். | தொங்கல் கணக்கு உருவாகுவதற்கான காரணத்தை அடையாளம் கண்டு சரிசெய்தல் வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 18 குழுக்கள் தொடர்பான மொத்தமாக ரூபா 34,945,037 ஆன 75 சொத்துக்களின் மீதி, 08 குழுக்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 28,999,284 ஆனக 31 பொறுப்புக்களின் மீதி, 02 விவசாய வங்கிகள் தொடர்பாக மொத்தமாக ரூபா 19,800,575 ஆன 18 கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதி பஸ்பன்ன விவசாய வங்கியின் மொத்தமாக ரூபா 23,786 ஆன 02 செலவு மீதிகள் மற்றும் பம்பரபான விவசாய வங்கி தொடர்பான மொத்தமாக ரூபா 2,755,916 வ5ருமானங்கள் செலவுகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் 14 மீதிகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் பேரேட்டுக் கணக்குகள் மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் உரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.. | எதிர்வரும் காலங்களில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற அனைத்து மீதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக தேவையான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மடொல்சிம கமநல சேவை குழுவின் 2024 சனவரியிலிருந்து 2024 செப்தெம்பர் வரையான காலப்பகுதி தொடர்பான கொடுப்பனவு வவுச்சர்கள், சில்லறை காசு வவுச்சர்கள், சில்லறை காசேடு விற்பனைப் பணத்தை கொடுப்பனவு செய்யு ம் அடிப்படையில் பொருட்களை வழங்கும் பதிவேடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் சில்லறைக் காசேடு என்பன பாதுகாப்பாக கட்டிவைத்ததன் பின்னர் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டது. மற்றும் 2024 ஆம் ஆண்டின் போது வி.மு கடன் வழங்கப்படவில்லை. | அனைத்து ஏடுகளையும் ஆவணங்களையும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | சபுகொல்ல கமநல சேவை குழுவின் வங்கி நடைமுறை கணக்கு தொடர்பாக 2024 திசெம்பர் மாதத்திற்கு தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 08 ஆண்டுகள் காலப்பகுதியாக காணப்பட்டு வரும் வங்கி மீதிக்கு சேர்த்தல் ரூபா 56,769 மற்றும் | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டபடுகின்ற அனைத்து மீதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

கழித்தல் ரூபா 18,783 ஆக மேற்கொள்ளப்பட்ட செம்மையாக்கல்களுக்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அச்செயற்பாடுகளை அடையாளங்கண்டு தேவையான மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | | | பெறுமதி | இணக்கமின்மைகள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | - | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 | - | 07 குழுக்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வினை மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | நிதிப்பிரமாணம் 188(2) | 56,025 | கபுகொல்ல குழுவினால் வைப்புச் செய்யப்பட்ட போதிலும் மேற்படாத 09 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 396(இ) | 252,688 | 03 குழுக்களினால் வழங்கப்பட்ட, கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 11 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்வரும் காலங்களில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | -மேற்படி- |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 | - | 10 குழுக்களின் பொருட்கள் பணம் என்பவற்றிற்கு பொறுப்பாக செயற்படுகின்ற 17 உத்தியோகத்தர்களினால் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | 04 குழுக்களினால் பதில் வழங்கப்படாதிருந்ததுடன் 08 குழுக்களினால் எதிர்வரும் காலங்களில் நிர்ணயிக்கப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி- |
| (v) | நிதிப்பிரமாணம் 891 | - | 14 குழுக்களினால் பிணைவைப்பு பாதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | 05 குழுக்களினால் பதில் வழங்கப்படாதிருந்ததுடன் 09 குழுக்கள் எதிர்வரும் காலங்களில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

(ஆ) கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 1986 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 264 ஆம் இலக்க சுற்றறிக்கையின் I ஆம் பந்தி | 1,417,283 | 14 குழுக்களினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய அறை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரிதிமான கமநல சேவை குழுவினால் அறவிட வேண்டிய ரூபா 8,640 பணம் முன்கொண்டு வரப்படும் மீதி எனவும் ஏனைய 13 குழுக்களினால் எதிர்வரும் காலங்களில் உரிய | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தி நிலுவை வாடகை அறவீடு செய்யப்படும். | தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க சுற்றறிக் கையின் 3.4.9 ஆம் பந்தி | - | ஒவ்வொரு மாதத்தின் போதும் கடன் வழங்கப்பட்ட விவசாயிகளின் பெயர்ப் பதிவேடு தலைமை அலுவலகத்திற்கான பிரதியுடன் மாவட்ட பிரதி/ உதவி ஆணையாளருக்கு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி அதன் பிரதியை கமநல சேவை நிலையத்தில் காட்சிப்படுத்த வேண்டிய போதிலும் பண்டாரவளை, தியலும, நிகபொத ஆகிய கமநல வங்கியினால் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க சுற்றறிக் கையின் 3.4.11 ஆம் பந்தி | - | பஸ்ஸர கமநல வங்கியிடமிருந்து கடனைப் பெற்ற விவசாயிகளுக்கு விவசாய இடர் கடன் காப்புறுதி கணக்கு பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iv) | 2014 ஆகஸ்ட் | - | நாளாந்தம் கையில் கைத்திருக்க கூடிய | ஒரு குழுவினால் பதில் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| 22 ஆந் திகதிய 07/2014 ஆம் இலக்க (107 ஆம் இலக்கத் தின் திருத்தம்) சுற்றறிக் கை | உச்ச அளவு பணம் ரூபா 10,000 ஆக இருந்த போதிலும் 10 குழுக்களினால் அந்த எல்லையை மிகைத்து 428 சந்தர்ப்பங்களின் போது பணம் கையில் வைத்திருக்கப்பட்ட டிருந்தது. | வழங்கப்படாதிருந் ததுடன் 03 குழுக்களினால் பணத்தை வைப்புச் செய்வதற்கு செல்ல உள்ள தூரத்தின் அளவு 6 KM இனை விட அதிகமானது என்பதனால் நாளாந்தம் வைப்புச் செய்யும் சிக்கல் உள்ளது மற்றும் 06 குழுக்களினால் பிற்பகல் 03 மணியின் பின்னர் பணம் அடுத்த நாள் வைப்புச் செய்யப்படுகின்றது |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

பதுளை மாவட்டத்திலுள்ள 31 கமநல சேவை நிலையங்களுக்கு மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த செயற்பாட்டு விளைவுகள் ரூபா 24,062,390 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 18,455,589 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 5,606,801 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.

பதுளை மாவட்டத்திலுள்ள 30 கமநல வங்கிகளுக்கு மீளாய்வாண்டிற்கான ஒட்டுமொத்த செயற்பாட்டு மிகை ரூபா 21,053,901 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | விழவசாயிகளுக்கு வழங்குவதற்காக 09 கமநல சேவை நிலையங்களுக்கு கிடைத்திருந்த 3,936 கிலோ கிராம் எம்.ஓ.பீ பசளை, 4,343 கிலோ கிராம் ரீ.எஸ்.பீ பசளை, 4,018 கிலோ கபிராம் யூரியா மற்றும் 582 கிலோ கிராம் ஏனைய பசளைகள் என்பன காலாவதியாகி களஞ்சியத்தில் காணப்பட்டது என | யூரியா பெரிய கட்டியாகியதன் காரணமாக விவசாயிகளினால் கொள்வனவு செய்யப்படவில்லை மற்றும் கமநல சேவை நிலையங்களுக்கு வருகை தரும்போது செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்ற போக்குவரத்து செலவு மிகவும் அதிகமாக | துரிதமாக ஆலோசனைகளைப் பெற்று தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது | இருப்பதன் அடிப்படையில் பசளைகளை எடுத்துச்செல்ல வருகை தராமை | |
| (ஆ) | 16 கமநல சேவை குழுக்களினால் அக்குழுக்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு சரியாக அடையாளம் காணப்பட்டிருந்தும் அவற்றின் சட்டரீதியான உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைக்காக உரிய பிரதேச செயலாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் பெற்று கமநல சேவை குழுக்களுக்குச் சொந்தமான காணிகளின் சட்ட ரீதியான தன்மையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நாகதீப கமநல சேவை நிலையத்தின் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தராக சேவையாற்றி 2019 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 93,118 கடன் மீதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய பணத்தை செலுத்துமாறு உத்தியோத்தருக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தம்பவின்ன கமநல சேவை குழுவினால் 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதியிலிருந்து 03 ஆண்டுகள் உடன்படிக்கை செய்த காலத்திற்கு குழுவிற்குச் சொந்தமான இரண்டு சக்கர உழவு இயந்திரம் திவிதொடவெல விவசாய அமைப்பிற்கு ரூபா 200,000 பணத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ரூபா 125,000 பணம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அப்பணத்தை திருப்பி செலுத்த தவறியமை சம்பந்தமாக உடன்படிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 04 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக மொத்தமாக ரூபா 155,204 ஆன நிலுவையாக உள்ள ஏக்கர் வரிப் பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் அறவீடு செய்வதற்கு் நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அறவீடு செய்து முடிவு செய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 04 கமநல சேவை குழுக்களின் 29 விவசாய ஆராய்ச்சி மற்றும் உதவி உத்தியோகத்தர்களுக்கு விற்பனை செய்து பணத்தை செலுத்தும் அடிப்படையில் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் வழங்கப்பட்ட பொருட்கள்/ உபகரணங்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 2,445,984 பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சலுகைக் காலத்தை மிகைத்ததன் பின்னர் சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவ

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 31 கமநல சேவை நிலையங்களுக்காக கணக்கீட்டு மென்பொருளை ஸ்தாபிப்பது தொடர்பாக கொள்வனவு செய்த மொத்தமாக ரூபா 8,588,862 பெறுமதியான 123 உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன | கணக்கீட்டு மென்பொருட்கள் ஸ்தாபிக்கப்படவில்லை என்பதனால் உபகரணங்களை பயன்படுத்த முடியவில்லை. | கணக்கீட்டு மென்பொருட்களை ஸ்தாபித்து உரிய உபகரணங்களை பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | நாகதீப கமநல சேவை குழுவின் நெல் மற்றும் சோளத்தை உலர்த்தும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற ரூபா 2,351,000 பெறுமதியான ஒரு இயந்திரம் 09 ஆண்டுகள் | கமநல சேவை அதிகாரச் பிரதேசத்தைச் சார்ந்த வயல் காணிகளுக்கு இயந்திரத்தினைப் பயன்படுத்த முடியாதுள்ளது. | பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலையத்திற்கு வழங்குவதற்கு அல்லது சிறப்பாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | | வேண்டும். |

## 3.4 ஆளணி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு மற்றும் 31 கமநல சேவை குழுக்களுக்கு அங்கீகரித்த ஆளணியிலுள்ள 09 பதவிகள் தொடர்பாக 264 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்பட்டதுடன் 04 பதவிகள் தொடர்பாக 11 உத்தியோகத்தர்களின் மிகைகள் காணப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | ஆளணியை மீளாய்வு செய்து வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் இன்றி ஆளணியை சிறந்த மட்டத்தில் பேணுதல் வேண்டும். |

## 4 கமநல வங்கி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1999 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் 29 குழுக்களினால் 3,035 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாயக் கடன் பணத்தில் ரூபா 93,563,983 தொகை, 25 குழுக்களினால் 669 விவசாயிகளு க்கு வழங்கப்பட்ட செயற்திட்ட கடன் பணத்தில் ரூபா 34,060,775 தொகை மற்றும் 21 குழுக்களினால் 478 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட செயற்திட்ட கடன் பணத்தில் ரூபா 14,984,724 தொகை மற்றும் 13 குழுக்களினால் 81 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 3,410,346 தொகையாக மொத்தமாக ரூபா 146,019,828 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல், கமநல இணக்க சபைக்கு அனுப்பிவைத்தல் அலுவலக பரீட்சிப்புக்களை நடாத்துதுல், தெரியப்படுத்தும் கடிதங்களை அனுப்பிவைத்தல் என்பவற்றின் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடனை வழங்குதல் மற்றும் உரிய காலத்தில் கடனை அறவீடு செய்தல் தொடர்பாக முறையான புலனாய்வினை மேற்கொண்டு உரிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |